தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய ம.தி.மு.க.வினர் WHISTLE அடிங்கள் – VIBE செய்யுங்கள் – DANCE ஆடுங்கள்;

# தேவையில்லாமல் தி.மு.க.வை விமர்சனம் செய்யாதீர்கள்!

## ம.தி.மு.க.வுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டனம்!

*அரியலூர்,ஜுன், 30--*

நேற்று முன்தினம் நடைபெற்ற மதிமுக பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திமுக கூட்டணியில் இருந்து மதிமுக வெளியேறுவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் திமுக குறித்து தேவையற்ற விமர்சனங்களை மதிமுகவினர் முன்வைத்து வருவதாகவும், அதற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் திமுகவிற்கு உள்ளது என்று கூறிய முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் வீடியோ ஒன்றினை வெளியிட்டு மதிமுகவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

திமுக கூட்டணியிலிருந்து மதிமுக விலகியதற்கு, திமுகவினர் பெரும் மகிழ்ச்சியாக உள்ளனர். யாரும் வருத்தப்படவில்லை இதில் பெரிய விமர்சனம் செய்யாது கடந்து செல்கிறோம். ஆனால், மதிமுக தரப்பிலிருந்துசிலர்விமர்சனங்களை முன்வைக்கும் போது, நாங்கள் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் இருக்கிறோம்.

ஏதோ திமுக தயவு இல்லாமல், தலைவர் கலைஞரின் தயவு இல்லாமல் வைகோ வளர்ந்தார் என சிலர் பேசுகின்ற செய்தியை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய இடத்தில் நாங்கள் இருக்கிறோம். வைகோவின் வரலாறு தெரியாமல் மதிமுகவில் இருக்கின்ற சிலர் பேசலாம். ஆனால் திமுகவில் இருப்பவர்கள், மதிமுகவின் வரலாறு அறிந்தவர்கள். வைகோ நாடாளுமன்றத்தில் போய் கர்ஜித்த பிறகுதான் வைகோ என்ற அடையாளம் கிடைத்தது. ஆனால், அந்த நாடாளுமன்றத்திற்கு வைகோவை அனுப்பியது யார் எனில்? எங்கள் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான்.

அதுவும் ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, மூன்று முறை. நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக 1978-1990 என ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடர்ந்து அனுப்பி நாடாளுமன்றத்தில் வைகோ பேச தைரியத்தை கொடுத்தது திமுக. தைரியத்தை கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர். ஒரு கட்சியின் தலைவர் ஆதரவு இல்லையெனில் எந்த தொண்டரும் பேச முடியாது. அந்த தெம்போடு தான் வைகோ பேசி அந்த பெயரை பெற்றார்.

ஆனால், அதற்கு நன்றியாக அவர் மதிமுகவை ஆரம்பித்து, திமுகவை பிரித்தார். அதற்கான பலன்களை தொடர்ந்து, அவர்களே பார்த்துக் கொண்டுள்ளனர்.

அதிமுககூட்டணியிலே, பாஜக கூட்டணியிலே போட்டியிட்டு சிவகாசி தொகுதியிலே வெற்றி வாய்ப்பை இழந்த கதை எல்லாம் எல்லோருக்கும் தெரியும். சிவகாசி தொகுதியில் கலைஞரால்தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார்.

2019 மீண்டும் எங்களது கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தயவினால் தான் மேலவை உறுப்பினராக மீண்டும் அனுப்பப்பட்டார். எனவே 4 முறை திமுக எந்த சிறு சங்கடமும், தேர்தல் சிரமமும் இல்லாத அவரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக ஆக்கி அழகு பார்த்தது. இந்த பதவி எல்லாம் திமுக தயவால் தான் வைகோவுக்கு வந்தது.

மதிமுக என்று ஒன்றை ஆரம்பித்து 1996-ல் ஒட்டுமொத்தமாக 234 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பை இழந்ததே அவருக்கு கிடைத்த பரிசு. அவர்தான் ஆட்சியைப் பிடிக்கப் போகிறார் என பெரிய HYPE கொடுத்த காலகட்டத்தில், மீண்டும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் முதலமைச்சரானார்.

எனவே வைகோவின் வரலாற்றை பேசுவதற்கு முன்பு அனைத்தும் திமுகவினருக்கு தெரியும் என்பதை நினைத்து மதிமுகவினர் பேச வேண்டும். இன்னும் சொல்லப்போனால் வைகோவின் மிச்ச வரலாற்றை நாங்கள் சொல்வதை விட, மதிமுகவிலிருந்து வெளியே வந்துள்ள மூத்த தலைவர்கள் கேட்டாலே தெரியும். வைகோ பொடா வழக்கிலிருந்து விடுதலையாக போராடியவர், முத்தமிழறிஞர் கலைஞர். அந்த பொடா வழக்கில் வைகோவுடன் உடன் இருந்தவர் மரியாதைக்குரிய செவ்வந்தியப்பன், அழகுசுந்தரம், செங்குட்டுவன் அனைவரும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டுள்ளனர்.

இவர்கள் தான் மதிமுகவின் தூண்களாக உடன் இருந்தவர்கள். அன்று மதிமுக துவங்கிய போது யார் இருந்தார்கள்? இன்று யார், யார் இருக்கிறார்கள்? என்று கணக்கு பார்த்தாலே தெரியும். இன்றைய மதிமுகவின் நிலை என்ன என்பது தெரியும்.

இதற்கு மேலும் பேசினால் வைகோவின் துவக்க காலத்தில் அந்த பயணத்தை துவங்கிய போது, தலைவர் கலைஞர் பேசுகிறபோது மேடையில் காலடியில் அவர் அமர்ந்திருந்த காட்சிகளை நேரடியாக பார்த்த சாட்சிகள் எல்லாம் உள்ளனர். அவர்களெல்லாம் பேச ஆரம்பித்தால், மதிமுகவின் மொத்த வரலாறும் முடிந்துவிடும். ஆகவே மதிமுகவினருக்கு அன்போடு சொல்லிக் கொள்கிறேன்.


போய் விட்டீர்கள் விஜய் படத்தை பார்த்துவிட்டு “விசில்” அடிங்க, மகிழ்ச்சியா இருங்க, “VIBE” ஆகுங்க. அவர் படத்தில் வருகின்ற பாட்டை கேட்டு உயர்கல்வித்துறை அமைச்சர் காங்கிரஸ் விஸ்வநாதன் “DANCE” ஆடியது போல் நடனமாடி மகிழ்ச்சியாக இருங்கள். தேவை இன்றி திமுகவினரை விமர்சிப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள் என மதிமுகவினருக்கு எச்சரிக்கை விடுத்து முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வீடியோ வெளியிட்டுள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்
### ஜுன் 30 (2015)



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அன்றும், இன்றும், என்றென்றும் அவரே ஆள்கிறார்!

தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து, அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும், ஆயாராம், காயாராம் கட்சிகளின் அந்தர்பல்டி நிலைகளால் எப்படியோ தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஆட்சியமைத்து நாற்பத்தைந்து நாட்களை நகர்ந்திவிட்டது ஆளுங்கட்சி.



தேர்தல் அறிக்கையில் அவிழ்த்து விட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வக்கற்ற, செயல்திறனற்ற நிலையில் மூச்சு முட்டித்திணருகிறது இந்த மைனாரிட்டி அரசு.

நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் ஆட்சியில் மக்களுக்குப் பயனளித்து வந்த நலத்திட்டங்களுக்கு புதிய நாமகரணம் சூட்டி, தங்களின் சிந்தனையில் உதித்த சீர்மிகு மக்கள் நலத்திட்டங்கள் இவையென தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர்.

நாட்டில் எங்கும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், தொடர்மின்வெட்டு என நாளும் மக்கள் நடுக்கமுடன் இருட்டில் தவிக்கின்றனர்.

இதை கண்காணித்து மக்கள் கவலையை போக்க வேண்டிய அரசும், அரசுப் பிரதிநிதிகளும் ரீல்ஸ் அரசியல் செய்து, முன்னுக்குப் பின் முரணாகப் பேசி, பொதுமக்களின் எரிச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்.

மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல் என்பது போல் அல்லாமல், யாருக்கும் அரசுக்கு அறிவுரையோ, ஆலோசனையோ சொல்லும் திறமையில்லை.

சுற்றுச்சூழல் துறையை சுற்றுலா துறை எனும் ஆஷாடபூதிகள் தான் அங்கு அமைச்சர்கள்.

தேர்தல் முடிவுகளுக்கு பிறகு ஆட்சி அமைக்க மெஜாரிட்டி இல்லாத நிலையில் எதிரணியில் வெற்றி பெற்ற, தனது சொந்த கட்சி வேட்பாளர்களையே தோற்கடித்த கட்சிகளோடு திடீர் உறவு.

அதுபோல தி.மு.க. தலைவரின், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்களின் கடின உழைப்பால், மண்டலச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள், மகளிரணித் தொண்டர்க ளின் பெரும் ஒத்துழைப்பால் கூட்டணி தர்மம் என்ற சொல்லிற்கு குந்தகம் விளைவிக்காமல் பணியாற்றியதால் பெற்ற வெற்றியை விரலில் இட்ட மை கூட காய்வதற்கு முன்பே காய் நகர்த்தி கள்ள உறவு கொண்ட காங்கிரஸ்!

நாங்கள் தி.மு.க. கூட்டணியில் தான் இருக்கிறோம். ஆனால் தற்காலிக ஆதரவு மட்டுமே தருகிறோம் என்ற கம்யூனிஸ்ட் கட்சியினர். மாப்பிள்ளை அவர்தான். ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை எங்களுடையது என்பது போல.

ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது. அது ஜனநாயகத்திற்கு கேடு , ஆட்சிக்கலைப்பை அனுமதிக்க முடியாது என்று ஜனநாயக தூதுவர்களாக தங்களைக் காட்டிக் கொண்டு, தங்களுக்கு வெற்றியை தேடித்தந்த தலைவரை மறந்து, அல்லும், பகலும் அயராது உழைத்த தி.மு.க. தொண்டர்களின் முகங்களை மறந்து விட்டு, முழுவதுமாகப் புதைந்து போனார்கள் பணம், பதவி எனும் போதை தலைக்கேறி.

வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



கிருஸ்தவ வேத நூலான பைபிளில் இயேசு கிறிஸ்துவின் 12 சீஷர்களில் யூதாஸ் காரியேத்து அவரை முத்தமிட்டு அடையாளமிட்டு காட்டிக் கொடுத்தான். பேதுரு என்பவன் அவருக்கும் எனக்கும் சம்மந்தமில்லை. நான் அவரை அறியேன் என்று மறுத்து இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட காரணமானான். என்று வருகிறது.

ஆனால் இந்த இந்தியா கூட்டணியில் இருக்கும் ஒரு சிலரைத்தவிர எல்லோருமே காட்டிக்கொடுத்ததை போன்ற குற்றத்தை, கொடுஞ்செயலை புரிந்தனர்.

இருந்து விட்டுப்போகட்டுமே!

தமிழ்நாடு இன்னும் 20 ஆண்டுகள் பின்னோக்கி போகுமே என்ற கவலையை தவிர நமது தலைவர், திராவிடப் பேரரசர் அவர்களின் தியாகம், மதிப்பு, மரியாதை குறைந்திடவா போகிறது? நாம் ஒரு போரைத் தான் இழந்தோம்! களத்தையல்ல!

சட்டமன்றத்தில் முதல்வர் பேரை உச்சரிக்கும் பேரவைத் தலைவரின் உதடுகளில் ஸ்டாலின் என்றே வந்து அதை சாமார்த்தியமாக சமாளித்துக் கொண்டார்.

உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் ஒரு நிகழ்ச்சியில் இத்தகைய சாதனைகளை செய்தவர் நமது முதல்வர் ஸ்டாலின் என்றே சொல்கிறார்.

இப்படியெல்லாம் எதிர் நிலையில் உள்ளோரின் உள்ளத்திலும் யதார்த்தமாக இன்னும் முதல்வராக நிலைத்திருக்கிறார் நமது கழகத் தலைவர் அவர்கள்.

போதிய பெரும்பான்மை இன்னும் சந்தேகத்திற்கிடமின்றி அமையவில்லை என்ற அச்சத்தில் எதிரணியில் உள்ளவர்களை பேரம் பேசி , பதவியாசை காட்டி, பணியவைத்து, அவர்கள் பெற்ற வெற்றியை ராஜினாமா செய்யச் செய்து, தனது இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் கேவலங்களை இந்த ஆட்சி அரங்கேற்றி வருகிறது.

அதுகூட பாருங்கள். உலக அரசியல் வரலாற்றில் வெற்றி பெற்ற ஒருமாதத்திற்குள் தனது பதவியை ராஜினாமா செய்பவரும், சிரித்து, சபாநாயகரும் பேரின்ப சிரிப்புடன் பெற்றுக் கொண்டு ஊடகங்களுக்கு அந்தப் பட்டங்களை வழங்கிய கேலிக்கூத்து வேறெங்கும் நடந்ததில்லை.

நாம் கூடத்தான் ராஜினாமா செய்தோம்.

2004 ல் வாஜ்பாய் அவர்களின் ஒன்றிய அமைச்சரவையில் தலைவர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்று,, ஒன்றிய காபினெட் அமைச்சர் பதவிகளை தூக்கியெறிந்து மாண்புமிகு டி ஆர். பாலு, மாண்புமிகு ஆ. ராசா ஆகிய இருவர் பாராளுமன்ற கட்டிடத்திலிருந்து வெளியே வரும் புகைப்படக் காட்சியை தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலியில் வெளியிட்டு இருவரையும் உச்சி முகந்து பாராட்டி எழுதினார்.

ஆனால் இங்கோ பதவி போனால் பல்ஸ் போய்விடுமோ என்ற பயத்தில பலர் பல்லிளித்து பனையூர் பக்கம் பறக்கின்றனர்.

அங்கே ஆடுமாடுகளை தொட்டியில் அடைப்பது போல் தள்ளுமுள்ளு.

அப்புறம் தான் தெரிகிறதாம், புத்தி வருகிறதாம் சொந்தக் கட்சியிலேயே சுயமரியாதையோடு இருந்திருக்கலாமே என்று.

இந்தக்கேவலங்கள் மற்ற, மற்ற இயக்கங்களில் நடைபெறலாம்.

ஜயா பெரியாரின் வரலாற்றையறிந்து, அண்ணாவின் அன்புமொழி கேட்டு, தலைவர் கலைஞரின் கன்னித்தமிழ் கேட்டு, உயிரனைய தளபதியவர்களின் அயராத உழைப்பில் உள்ளம் கொள்ளை கொண்ட தொண்டன் உண்மைத் தலைவர் தளபதியவர்களின் தலைமையிலே, வாழ்ந்தா லும், வாழ்விழுந்து வீழ்ந்தா லும் இறுதி வரை, உறுதியாக இருப்போம் எனக் கண்ணீர் மல்க தலைவரின் கரங்களைப் பிடித்து ஆறுதல் சொல்கின்றனர்.

அறிவாலயம் பக்கம் வந்து பாருங்கள்.

ஆட்சி இல்லை. அதிகாரம் இல்லை அவரிடம்.

ஆனாலும் அவர் உள்ளே நுழையும்போது ஒரு பெருங்கூட்டம் தளபதியவர்கள் வாழ்க! என்றும் எங்கள் முதல்வர் வாழ்க! என எழுப்பும் வாழ்த்தொலி முழக்கங்களால் தலைவர் அவர்கள் உத்வேகம் பெறுகிறார்.

உள்ளே வந்து சந்திக்கும் உடன்பிறப்புகள், மூத்த முன்னோடிகள், கழக முன்னணியினர், மகளிர், மாணவர்கள், இளைஞர்கள் என ஆறுதல் சொல்ல வரும் எல்லோருக்கும் அவரும் தைரியம் சொல்கிறார். நானிருக்கிறேன்! என்று.

சினிமாக்காரனின் சின்ன புத்திக்கு இதுவெல்லாம் தெரியாது.

ஆமாம். அவர் இருக்கிறார். எங்கும் நிறைந்திருக்கிறார்!

மகளிர் மாத உரிமைத்தொகையில் அண்ணனாக அவர் இருக்கிறார்!

புதுமைப்பெண் திட்டத்தில் பயன்பெறும் மகளின் இதயத்தில் தகப்பனாக இருக்கிறார்!

தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் பயனுரும் மாணவனின் மனதில் ரோல் மாடலாக அவர் இருக்கிறார்!

மக்களைத்தேடி மருத்துவத்தில் பலரின் காயங்களுக்கு மருந்தாக அவர் இருகிறார்.

காலை உணவு திட்டத்தில் பிள்ளைகளின் பிடி சோற்றில் அவர் இருக்கிறார்.

விடியல் பயணத்தில் பயணிக்கும் தாய்மார்களின் உற்ற தனையனாக அவர் உடன் பயணிக்கிறார்.

ஏழை எளியோர் பெறும் ரேஷன் பொருட்களைக் கண்டு கசிந்துருகும் ஏழைகளின் கண்களில் ஆனந்தக் கண்ணீராய் அவர் இருக்கிறார்.

இந்த திட்டங்களில் எதையும் அப்புறப்படுத்தும் தைரியம், துடுக்கு எவருக்கும் இங்கு எழப்போவதில்லை!

இவையெல்லாம் ஏழைகள் இதயம் இன்புற, மக்களின் மனம் மகிழ, திராவிடப் பெருவேந்தர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவர் கொண்டு வந்த திட்டங்கள்!

400 ஆண்டுகள் கடந்தும் தாஜமகால் என்றதும் அதைக் கட்டிய ஷாஜகான் நினைவிற்கு வருவதுபோல்!

1000:ஆண்டிற்கும் மேலான தஞ்சை பெருவுடையார் கோயில் என்றதும் அதை உலகமே வியக்கும் வண்ணம் எழுப்பிய மாமன்னன் இராஜராஜ சோழன் பெயர் நிலைத்துநிற்பதுபோல் தமிழ்நாட்டில் இந்த திட்டங்கள் தொடரும் வரை தமிழ்நாட்டை தளபதியவர்கள் தான் ஆள்கிறார்.!

அன்றும், இன்றும், என்றும், அவரே ஆள்கிறார்!